**15.06.2023**

**STC No. 402/2017**

**அ.சா.1 இளங்கோவன், த/பெ வரதப்பன்**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு முன் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். சென்னையிலிருந்து எந்த வங்கி மற்றும் கிளையிலிருந்து பணம் எடுத்து எதிரிக்கு கொடுத்ததாக முன் அறிவிப்பில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். எதிரியை எங்கு, எந்த தேதியில் சந்தித்து பணத்தை கொடுத்தேன் என்று எனது அறிவிப்பில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி விவரங்களை எனது மனுவிலும் சொல்லியுள்ளேன். சென்னையில் உள்ள ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் எந்த கிளையில் பணத்தை எடுத்து எதிரிக்கு கொடுத்தேன் என்றால் சேப்பாக்கம் எழிலகம் கிளையில் பணத்தை எடுத்து எதிரிக்கு கொடுத்தேன். எனது வங்கி கணக்கு எண் 10848714008 ஆகும். மேற்படி எனது வங்கி கிளையில் எதிரிக்கு பணத்தை எடுத்துக் கொடுத்தற்கான விவரத்தை வங்கி மேலாளரை அழைத்து விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான். எனது ஓய்வூதிய பணத்தை வைத்து சேலம் அருகே எனது மனைவி பெயரில் காலிமனை வாங்கியுள்ளேனா என்றால் ஓய்வு பெறுவதற்கு முன்பே அந்த இடத்தை வாங்கினேன்.

2. சென்னை சேப்பாக்கம் எழிலகம் கிளையில் பணத்தை எடுத்து எதிரிக்கு கொடுத்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரியின் குடும்ப உறுப்பினர்கள் விவரம் தெரியும். அவர்கள் எத்ததை பேர், அவர்களுடைய பெயர் என்ன என்று தெரியாது. எதிரியுடன் எனக்கு எத்தனை ஆண்டு காலம் பழக்கம் என்றால் 10 ஆண்டு கால பழக்கம். எனது ஊருக்கும் எதிரியின் ஊருக்கும் 4 கி.மீ. துாரம் இருக்கும். எதிரியுடன் 10 ஆண்டு கால பழக்கம் இருந்திருந்தால் எதிரியின் குடும்ப உறுப்பினர் எத்தனை பேர், அவர்களுடைய பெயர் என்ன என்ற விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றும், எதிரிக்கும் எனக்கும் பழக்கம் இல்லாததால் தான்

அவர்களின் பெயர் மற்றும் விவரம் தெரியவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு உண்மையாகவே பணம் கொடுத்திருந்தால் பணம் கொடுத்த தேதியை மனுவில் குறிப்பிட்டு சொல்லியிருக்கமுடியும் என்றும், பணம் கொடுக்காததால் தான் மேற்படி மனுவில் தேதி குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. நான் கடைசியாக வருமான வரி கட்டிய தேதி என்னவென்றால் 31.05.2014 வரை கட்டியுள்ளேன். என்னுடைய பேன் கார்டு எண் AAKPY1871 ஆகும். எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

உண்மை நகல்

ஒம்/-அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர்,
துறையூர்.